# 20

# குடும்ப உறவைப் பேணுவோம்

இஸ்லாத்தில் குடும்ப வாழ்வுக்குத் தனியான இடமுண்டு. சிறந்த சமூகம் உருவாவதற்கு சிறந்த குடும்பம் அவசியமாகும்.




இஸ்லாம் இவ்வுலகில் நிலைத்திருக்க சிறந்த குடும்ப அமைப்பு தேவை. எனவேதான் குடும்ப வாழ்வு சிறப்பாக அமைவதற்கு அவசியமான அனைத்து வழிகாட்டல்களையும் இஸ்லாம் முன்வைத்துள்ளது.

## குடும்பத்தின் சீரான போக்குக்கு அவசியமான அம்சங்கள்:

### 1. சிறந்த குடும்பச் சூழல்:

‘‘ஒவ்வொரு குழந்தையும் இஸ்லாத்தை ஏற்கும் இயற்கைத் தன்மையிலேயே பிறக்கின்றது. பெற்றோர்களே அதனை யூதனாக அல்லது நஸாராவாக அல்லது நெருப்பு வணங்கியாக மாற்றிவிடுகின்றனர்’’

சிறந்த சூழலை உருவாக்கிக் கொடுக்காமை குழந்தைகளின் வாழ்வில் ஏற்படுத்தும் பாரிய பாதிப்பு என்பது மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஹதீஸில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

### 2. குடும்ப அங்கத்தவர்களுக்கு இடையேயான அந்நியோன்னிய உறவு:

- குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றுவது சிறந்த உறவைப் பேண வழியாகும். எனவேதான் இஸ்லாம் கணவன்-மனைவி, பெற்றோர்-பிள்ளைகள், உறவினர்கள் ஆகியோருக்குரிய கடமைகளை வீட்டுச் சூழலிலிருந்தே நற்பண்புகளை வளர்த்துக் கொள்வோம்:

வரையறுத்துள்ளது. உதாரணமாக, பெற்றோருக்கு உபகாரம் புரிதல் பிள்ளைகள் செய்ய வேண்டிய முக்கியமான கடமையாகும். அல்லாஹ்வை வணங்குவதற்கு அடுத்த இடத்தை அல்குர்ஆன் இக்கடமைக்கு வழங்கியுள்ளது.

''நீங்கள் அனைவரும் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து வாழுங்கள். அவனோடு எதனையும் இணையாக்காதீர்கள். தாய் தந்தையரிடம் நல்லவிதமாக அன்புடன் நடந்து கொள்ளுங்கள்'' (4:36).



- இவ்வாறே நபி r அவர்களின் விளக்கமும் அமைகின்றது.

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) கூறுகின்றார்கள்: ''நான் நபி r அவர்களிடத்தில் செயல்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது எது என வினவினேன். அதற்கு ''தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்றுவது'' என்றார்கள். அதற்கடுத்தது எது என வினவ, ''பெற்றோருக்கு உபகாரம் புரிதல்'' என்றார்கள். அதற்கடுத்தது எது என வினவியபோது, ''அல்லாஹ்வின் பாதையில் போராடுதல் என்றார்கள்'' (புஹாரி, முஸ்லிம்).

### 3. உறவினர்கள் அனைவரையும் மதித்து நடத்தல்:

''எவர் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசிக்கின்றாரோ அவர் உறவினர்களை சேர்ந்து நடக்கவும்'' (புஹாரி, முஸ்லிம்).

குடும்பம் சீராக இருக்க இம்மூன்று அம்சங்களும் இன்றியமையாதவை என்பதனை ஒருபோதும் மறத்தலாகாது.

குடும்பம் நல்ல நிலையில் இருக்க நாம் நிறைவேற்ற வேண்டிய பல பணிகள் உள்ளன. அவற்றை முறையாக நிறைவேற்றும்போது உறவினருக்கு இடையில் ஒற்றுமை ஏற்படும். எனவே நாம்,

- வீட்டுத் தேவைகளில் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வோம்:

அஸ்வத் இப்னு யஸீத் (ரழி) கூறுகின்றார்: ''நான் ஆயிஷா (ரழி) அவர்களிடம், ரஸூல் r அவர்கள் வீட்டில் என்ன செய்வார்கள் எனக் கேட்டேன். அதற்கவர்கள், நபி r அவர்கள் தம் குடும்பத்தினரின் பணிவிடைகளில் ஈடுபட்டிருப்பார்கள். தொழுகை நேரம் வந்தால் தொழுகைக்குச் சென்று விடுவார்கள்'' எனக் கூறினார்கள் (புஹாரி).

- வீட்டுச் சூழலை கல்விக்கு ஒத்துழைக்கும் சூழலாக மாற்றுவோம்:

''கற்பவனாக இரு. அல்லது கற்பிப்பவனாக இரு. அல்லது கற்றலுக்கு உதவுபவனாக இரு. நான்காமவனாக இராதே!'' (புஹாரி)

‘‘நற்பாக்கியம் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கின்றது. ஒழுக்கம் பெற்றோரிடமிருந்து கிடைக்கின்றது’’ (அல் அதபுல் முப்ரத்).

- வீட்டுச் சூழலில் தீமையைக் களைந்திடுவோம்:

‘‘தீமைகளைக் காணும்போது மனிதர்கள் அதைத் தடுக்காது சும்மா இருந்தால் வெகுவிரைவில் அல்லாஹ்வின் வேதனை அவர்களைச் சூழ்ந்துகொள்ளும்’’ (அபூதாவூத்).

- வீட்டுச் சூழலை இஸ்லாமியச் சூழலாக்குவோம்:

‘‘உங்கள் குழந்தைகள் ஏழு வயதை அடையும்போது தொழும்படி ஏவுங்கள். அவர்கள் பத்து வயதை அடைந்தால் அதற்காக அவர்களை அடியுங்கள். தனியான படுக்கைகளில் அவர்களைப் படுக்க வையுங்கள்’’ (அபூதாவூத்).

- அனைத்து நற்கருமங்களிலும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வோம்.

‘‘நன்மையிலும் பயபக்தியிலும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்’’ (5:2) என அல்லாஹ் கட்டளையிடுகின்றான்.

- எமது இலக்கை அடைய நல்ல குடும்பங்கள் இன்றியமையாதவை என்பதை என்றும் நினைவில் கொள்வோம்:

‘‘விசுவாசிகளே! நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள் அதன் எரிகொள்ளிகள் மனிதர்களும் கற்களுமாகும்’’ (அல்குர்ஆன் 66:06).

**பயிற்சி:**

1. பெற்றோரை மதித்து நடக்க வேண்டும் என்பதற்கு ஆதாரமாக ஒரு குர்ஆன் வசனத்தை எழுதிக் காட்டுங்கள்.
2. பெற்றோரின் சிறப்பை எடுத்துக் காட்டும் ஒரு ஹதீஸை எழுதிக் காட்டுங்கள்.
3. குடும்ப சூழலை இஸ்லாம் விரும்பும் அமைப்பில் வைத்திருக்க நீர் பெற்றோருக்கு உதவக் கூடிய வழிகளை விளக்குக.
4. நல்ல குடும்பத்தை உருவாக்க கைக்கொள்ள வேண்டிய அம்சங்களுள் எவையேனும் மூன்றைக் குறிப்பிடுக.
5. வீட்டுச் சூழலைக் கல்விச் சூழலாக ஆக்கிக் கொள்ள நீங்கள் என்ன செய்யலாம் என்பதை விளக்குங்கள்.